தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, கார்த்திகை 25 (10-12-'60). சனிக்கிழமை | இதழ் 26

அமைதி

அருணன்

என் மனம் ஏதோ ஒன்றை விரும்பியது. அது என்ன என்பதே தெரியவில்லை. எப்படி நிம்மதி பெறுவேன்?

அது நோயாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டு டாக்டரிடம் காண்பித்தேன். அவர் ஆமாம் என்ருர். அது மன நோய்! மன நோய்க்கு மருந்தில்லை என்ருர் அவர்! ஏனில்லை? அந்த நோய் எனக்கு எப்படி வந்தது? எப்போது வந்தது?

பணக்கார குடும்பத்தில் பிறந்து, கவலை என்பதே என்ன என அறியாமல் வளர்ந்து, காதலித்த பெண்ணையே மணந்து, கண் நிறைந்த மக்களைப் பெற்று, எல்லா விதத்திலும் நிறைவையே கண்ட எனக்கு என்ன மனக்குறை இருக்க முடியும்?-எனக்குத் தெரியாமல்!

இரவு இரண்டு மணிவரை தூக்கம் வரமாட்டேனென்கிறது அமைதி பயங்கரமாகத் தோன்றுகிறது. காலையில் பத்துப் பதினேரு மணிவரை தூங்குகிறேன். பக்கத்திலிருக்கும் தொழிற்சாலைச் சத்தம் தாலாட்டுப் பாடுவதுபோல இருக்கிறது.

கல்லினுள் தேரைபோல என் மனத்தினுள் ஏதோ ஒன்று இருக்கிறது. அதை வெளியேற்றும்வரை எனக்கு நிம்மதி இல்லை. தினசரி பொழுதுபோக்குமிடங்களுக்குத் தாராளமாகச் சென்று வரலானேன். சீட்டாடும் கிளப்புகளுக்குச் சென்று பணத்தை வாரி இறைத்துப் பார்த்தேன். ஒன்று போனல் பத்து வந்தது! ஒரே மகிழ்ச்சி! ஆனல்! அங்கு அடிக்கடிப் போக மனம் வரவில்லை. ஏதோ கசப்பான மருந்தை சிரமத்தோடுவிழுங்குவதுபோல தினசரி அங்கு போக எனக்குப் பிடிக்கவில்லை!

ஒரு நாள் முழுதும் ஒன்றும் சாப்பிடாமல் உட்கார்ந்தபடியே இருந்தேன்! சும்மா அல்ல! சென்ற கால நிகழ்ச்சிகளை நினைத்துக்கொண்டே! ஆனல் நினைத்து வருந்துகின்ற அளவுக்கு, மனத்தை உறுத்துகின்ற அளவுக்கு எதுவும் நடந்ததாக எனக்குத் தோன்றவில்லை!

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. இரவு பதினேரு மணி என்பதையும் பாராமல் என் மனைவி படுத்திருந்த அறைக்கு மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடிச் சென்றேன். அவளை எழுப்பினேன். அவள் பதறிக்கொண்டே எழுந்தாள். "என்ன! என்ன?" என்று கேட்டாள். நான் ஒன்றும் சொல்லாமல் அவள் முகத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்தேன். அதில் முதுமை ரேகைகள் தெரிந்தனவே தவிர, கவலைக் கோடுகள் தெரியவில்லை!

நான் பெருமூச்சோடு அவளருகில் உட்கார்ந்தேன். "கல்யாணி" என்றேன். என் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். நெஞ்சைத் தொட்டுப் பார்த்தாள். மனம் நெற்றியிலும் நெஞ்சிலுமா இருக்கிறது?



ஜெ

"ஒன்றுமில்லை கல்யாணி! உன்னிடம் நானென்று கேட்க வேண்டும். இந்த இருபது வருட இல்லற வாழ்க்கையில் நான் உனக்கு ஏதாவது தீங்கு செய்திருக்கிறேனு? உன் மனதில் ஏதாவது அழுத்திக் கொண்டிருக்கிறதா!" என்று படபடப்பாகக் கேட்டேன். அவள் அழுது விடுவாள் போலிருந்தது. "இது என்னங்க பைத்தியம்மாதிரி! எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது." என்ருள். எனக்குத் திடுக்கிட்டது. என் மனக் குறையைத் தீர்த்துக் கொள்ளப் போக அவள் மனதில் சஞ்சலத்தை உண்டாக்கிவிட்டோமோ என்றுதோன்றியது. "இல்லை கல்யாணி. ஒன்றும் இல்லை. ஏதோ கனவுகள்...அந்த மயக்கத்தில் உளறிவிட்டேன்" என்று தெளிவில்லாமல் சிரித்துக்கொண்டு சொன்னேன். அவள் அதை உண்மை என்றே நம்பிவிட்டாள். அவனுடைய கலக்கம் ஒரு நொடியில் தெளிந்து விட்டது. என்னுடைய தெளிவில்லாத உளறலை அவள் நம்பிவிட்டாளே! தூக்க மயக்கமோ! இல்லை-

நான் நெஞ்சிலிருந்து இறங்காத சுமையோடு, என்னுடைய அறைக்குச் சென்றேன்.

சிறிது நேரம் சென்றது. இந்த இருளில் வெளியே சுற்றிவிட்டு வந்தாலென்ன என்று தோன்றிற்று. உடனே கிளம்பி விட்டேன் யாருக்கும் தெரியாமல்!

சென்னை நகரத்தின் முழுமையை ரசிக்க இப்பொழுதுதான் என்னல் முடிந்தது. நெடுஞ்சாலைகள் பலவற்றைக் கடந்து குறுகிய சந்து பொந்துகளையும் விடாமல்சென்றேன். ஓர் உற்சாகமும் உணர்வும்என்னைப் பலசாலியாக்கிற்று. இல்லாவிட்டால் இளைஞனைப் போல் சற்றும் தளராமல் இப்படி நடப்பேனு? பல புது அனுபவங்கள்கூட இப்போது எனக்கேற்பட்டது. ரோடுகளில் சொறி நாய்க்குப் பக்கத்தில் கட்டிய வேட்டியைப் போர்த்துக் கொண்டு நிம்மதியாக உறங்குகிற மனிதர்களை என் வாழ்க்கையிலேயே இப்போது தான் காண்கிறேன். அது மட்டுமா-?

குறுகலான வீதியொன்றை நான் கடந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டின்முன்பு என்னுடையகார்களில் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! சற்று நின்றேன். அதே சமயம் அந்த வீட்டின் கதவு திறக்கப்பட்டது அங்கிருந்து வருவது யார்?...என்னுடைய இரண்டாவது மகன் கோபி தள்ளாடிய நிலையில் காரில் வந்து உட்கார்ந்தான். நான் திகைத்துப் போய் அப்படியே நின்றேன். கார் கிளம்பி என்னருகே வந்தது. நான் துண்டினல் முக்காடு போட்டிருந்தேன், எப்பொழுதும் "சூட்" போடுகிறவன் வேட்டிகட்டிக் கொண்டிருந்தேன். அதனல் அவன் என்னைக் கவனித்தாலும் தெரிந்து கொள்ள முடியாது, என்ற தைரியத்தில் முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டு நின்றேன். அவன் என்னைப் பார்த்தானே இல்லையோ? கார் வேகமாகச் சென்று விட்டது. ஆனல் அந்த வீட்டு வாசலில் மட்டும் அந்தப் பெண், கார் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிதுநேரம் சென்றதும் உள்ளே போய்விட்டாள்

இப்பொழுது எனக்கு என்னைப் பற்றிய, என்மனநோயைப் பற்றிய சிந்தனையே கனவு போலத் தோன்றியது. இந்தப் பிள்ளைகளை நம்பியா அவ்வளவு பொறுப்புகளையும் தொழில்களையும் விட்டிருக்கிறேம்! இனிஎன்ன ஏது என்று எல்லாவற்றிலும் தலையிட வேண்டியதுதான் என முடிவு செய்து கொண்டேன். வீட்டை நோக்கி ஒரு நிம்மதியுடன் நடக்க ஆரம்பித்தேன். மனதில் நிம்மதி தோன்றியவுடன் உடலில் சோர்வு தோன்றியது.

அந்த நேரத்தில் அந்தப்பக்கத்தில் வந்த ஒரு ரிக்ஷாவை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

வழக்கத்திற்கு மாருகக் காலை ஆறரை மணிக்கே எழுந்து 'இன்னும் காபி தயாராகலையாடா மடையா' என்று சமையற்காரனைக் கோபித்துக்

கொண்டதும் அவன் அப்படியே பயந்து தடுமாறிப் போய் விட்டான். அவனுடைய தடுமாற்றத்தாலும் பயத்தாலும் எனக்கு சீனி போடாத காபி கிடைத்தது!

கசப்பான அந்தக் காபியைக் குடித்தேன். ஒரே இனிப்பாக இருந்தது. ஏன்? ★

கண்ணிருந்தும் இல்லை உறக்கம்!

கவலை வந்தால் முதலில் தாக்கப்படுவது உறக்கம்தான். அதன் விளைவு, நிம்மதியாக இருந்த நெஞ்சத்தில் சுமை ஏறிவிடுகிறது. நிலையான எண்ணங்கள் நிலைகெட்டுப் போய்விடுகின்றன. அலை அலையான துன்பங்கள் அகத்தைத் தாக்கி, முகத்தையும் தாக்கிவிடுகின்றன.

வாழும் உயிர்க்கு, உறக்கம் இன்றியமையாத ஒன்று; ஆனால், பல சமயங்களில் உறக்கத்தை உதறித் தள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது.

நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றிக் கவலைப்படும் அரசியல் வாதிகள் எத்தனையோ இரவுகளை உறக்கமின்றிக் கழித்திருக்கிருர்கள். கொள்ளை லாபம் அடிக்க எண்ணும் ஒரு சில வியாபாரிகள் இரவின் தொல்லையை எல்லையில்லாமல் அனுபவித்திருக்கிருர்கள். தேர்வுக் காலத்தில் புத்தகத்தைப் புதிதாகத் தொடுகின்ற சில மாணவச் செல்வங்கள், தேர்வைப்பற்றிய கவலையாலும்-அது தங்களுக்குத் தர இருக்கின்ற 'வெகுமதி'யைப்பற்றிய கற்பனைகளாலும் எத்தனையோ இரவுகளில் உறக்கத்தை தியாகம் செய்திருக்கிருர்கள்.

பொது வாழ்வுத்துறை-வர்த்தகத் துறை-கல்வித் துறை ஆகியவற்றில் மட்டும்தான் உறக்கத்தை தியாகம் செய்யும் நிலை ஏற்படும் என்பதல்ல! காதல் துறையிலும் உறக்கம் இல்லாது உள்ளம் நொந்து வாடுகின்ற உருவங்கள்,- தலைவன் தலைவியர்கள் ஏராளமாகஇருக்கின்றனர் ஏனையோரின் தொல்லைகளைக்கூட எளிதாக எண்ணி விடலாம்; ஆனால் காதல்நெஞ்சங்களின் துயரம் அவ்வாறல்ல! மேலும் ஆபத்தானது என்றே சொல்ல வேண்டும்.

தலைவனைப் பிரிந்த தலைவி, துயரத்தால் உறக்கம் கொள்ளாமல் உள்ளம் குமுறுவதும், உடல் நொந்து வாடுவதும், உயிரைப் போக்க முடிவு செய்வதும் பைந்தமிழ் இலக்கியத்தில் பரவிக் கிடக்கின்ற செய்தியாகும்.

ஒரு தலைவன்-ஒரு தலைவி-இருவரும் ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசிக்கின்றனர். 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்று கேட்டுக்கொண்ட நெஞ்சங்கள் இப்போது இணைந்துவிடுகின்றன; மண வாழ்வைத் தொடங்கத் திட்டமிடுகின்றன; ஆனால்...? மண வாழ்வுக்குமுன் திரைகடல் ஓடியும் திரவியம் தேட வேண்டும் என்ற விதிமுறை தலைவனின் மனத்திலே தோன்றுகிறது. 'பெற்றவர் தேடி வைத்த பெருஞ்செல்வம் இருந்தபோதும், மற்றும் தேடுதலே மைந்தன் சீர்' என்று முன்னோர் மொழிந்த சொல் அவன் நெஞ்சத்தில் வேருன்றிவிடுகிறது; எனவே தலைவியைப் பிரிந்து வெளிநாடு செல்கிருன்; தலைவியும் மனமொப்பி அவனை அனுப்பிவிடுகிருள்.

நாட்கள் சில கழிகின்றன; தலைவனை அன்புடன் அனுப்பிய தலைவிக்கு இப்போது தாங்கவொணுக் கவலை சேர்கிறது. ஆற்ருெணுத் துயருக்கு ஆளாகிருள் அந்தத் தூயவள்; துக்கம் அவள் நெஞ்சை அடைக்கிறது; அதன் விளைவு தூக்கம் தடைப்படுகிறது.

ஒருநாள்! நள்ளிரவு நேரம். காதலனைப் பற்றிய சிந்தனையில் கற்பனைகளைத் தவழவிட்டுக் கொண்டிருக்கிருள் அந்தக் கன்னி. நனவிலேயே கனவு காண்கிருள் அந்த நங்கை. காதலன் சேய்மையில் இருப்பதையும், அவன் அருகில் இல்லாததால் இரவு கொடுமையாக மாறித் துயர் செய்வதையும் உணர்கிருள் அந்த ஓவியத்துப் பெண்ணுள்! அவள் உள்ளம் நோகிறது! துன்பத்தைத் தோழியிடம் செ.. வி ஆறுதல் பெறலாம் என எண்ணுகிருள்; சுற்றுமுற்றும் பார்க்கிருள்; பாவம், அவள் மனம் மேலும் நோகிறது! காரணம், தோழி, அவளுக்காக விழித்துக் கொண்டிருக்க வில்லை; நன்ருக உறங்கிக் கொண்டிருக்கிருள்.

இந்தக் காட்சியைக் கண்டதும் தலைவிக்கு ஆத்திரமும் கோபமும் அளவின்றி வருகிறது; "நாம் தூங்காமல் துயருறும் போது இவள் மட்டும் சுகம் குறையாமல் தூங்கிக் கொண்டிருக்கிருளே!" என்ற பொருமை எண்ணம் அந்தப் பூவையின் உள்ளத்தில் தோன்றுகிறது உடனே, 'யான்பெற்ற துன்பம் பெறுகஇவ் வையகம்' என்ற போக்கிலே, தோழியை எழுப்புகிருள்; திடீரென, தன்னை எழுப்பும் தலைவியின் போக்கைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கிருள் தோழி; தோழியின் தவிப்பைக் கண்டு அவளுக்கு உடனே விளக்கம் தருகிருள் தலைவி.

"அன்புள்ள தோழியே! இருள் மிகுந்து அமைதியாகக் கிடக்கின்றது நள்ளிரவு; ஊர் மக்கள் அனைவரும் பேச்சொழிந்து, செயலொழிந்து உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள்! எவர் மீதும் வெறுப்பில்லாமல் இந்தப் பரந்த உலகமும் நிம்மதியாகத்தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் நான் ஒருத்திதான் உறங்காமல் வருந்திக் கொண்டிருக்கிறேன்" என்று, தன் பிரிவுத் துயரத்தை எடுத்துச் சொல்கிருள் தலைவி. அவளது உரையில் அவளது தனிமை நிலையும்-அதனுல், நேரும் கவலையும்-கவலையால் அவள் உறக்கமின்றித் திண்டாடும் செய்தியும் நமக்கு நன்கு புரிகிறது.



தலைவனைப் பிரிந்த இந்தத் தலைவியின் துயரம்-பதுமனுர் எழுதியுள்ள குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில் நன்கு விளக்கப் படுகிறது. அது இது:

நள்ளென் றன்றே
  யாமம் ; சொல்லவிந்(து)
இனிது அடங் கினரே
  மாக்கள் ; முனிவு இன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
  ஓர்யான் மன்ற
துஞ்சா தேனே

இன்னெரு தலைவி; இவள் சங்கு முழங்கும் தமிழ் நாட்டு மன்னவன் ஒருவனைக் காதலிக்கிருள்; அவன் பகைவர் உயிர் கொல்லப் படைகொண்டு சென்றிருக்கிருன். அதன் காரணமாக தலைவி, பிரிவு என்னும் பெருஞ் சூருவளிக்குள் அகப்பட்டுத் தவிக்கிருள். பிரிவு,நெஞ்சத்தில் துயரத்தை விரித்து வைக்கிறது. அதனுல் உறக்கம் தடைப்படுகிறது; உல்லாசம் மறைகிறது! பேச்சுக்குறைகிறது; பெருமூச்சு நிறைகிறது! உடலம் நலிகிறது; உணவும் கசக்கிறது, இரவு நீடிக்கிறது; இதயம்துடிக்கிறது. இமைகள்இமைக்க மறக்கின்றன; விழிகள் உறங்க மறுக்கின்றன. விழித்த விழி விழித்தபடிஇருக்கிருள் அந்த வேல்விழி வனிதை: கண்ணிரண்டு இருந்தும், நண்ணவில்லை உறக்கம். பாவம் அவள்! பரிதாபம் அவள் வாழ்வு!

பிரிந்து சென்ற தலைவனை எண்ணுகிருள்; அவள் இதயத்து எண்ணத் துக்குக் கடலின் ஓலம் பின்னணி இசையாகிறது: தன்னைப்போல கடலும் தூங்காமல் இருப்பது குறித்து அவள் மனத்திலே ஓரளவுதிருப்தி ஏற்படுகிறது இரவுப் பொழுதை எண்ணிப் பார்க்கிருள்; அவளது துயரத்தினுல் இரவு, விடியாத இரவாகக் காட்சியளிக்கிறது; ஆகவே இரவு மங்கையும் தூங்காமல் விழித்துக் கொண்டே இருக்கிருள் என்று எண்ணித் திருப்தி கொள்கிருள்.

ஆனால், சிலர் மட்டும் தூங்குகின்ற காட்சி அவள் மனக் கண்ணில் படுகிறது. அது முன்னிரவுக் காலமானதால், சிறிது நேரம் வானத்தில் தோன்றி நின்று தலைவியின் சிந்தனையைக் கிளறிவிட்ட திங்களும் மறைந்து விட்டது; உறங்கச் சென்று விட்டது! நள்ளிரவாகி விட்டதால் புட்கள் இருக்கும் இடம் தெரியவில்லை. அவைகூட, கூட்டுக்குள்ளும் மரப் பொந்துக்குள்ளும் கூளத்தைக்கொண்டு அமைத்துக் கொண்ட மெத்தையில் சத்தமின்றி நித்திரையைத் தொடங்கி விட்டன; காதலன் இல்லாத ஊர் அவளுக்கு வெம்மையைத் தருகிறது; அந்த வெம்மையை அணைத்துவிட தென்றல் காற்றிலும் கூட முடியவில்லை. எனவே தன் குணத்தை இழந்து விட்ட காற்றும், உற்க்கம் கொள்வதாக அவளுக்குப் படுகிறது. இப்படி யார் யாரோ உறங்குகிருர்கள்; ஆனால் அவளது இரு கண்கள் மட்டும் உறங்காது துயருறுகின்றன.

"சங்கு முழங்குத் தமிழ்நாட்டு அதிபனை நினைக்கும் போதெல்லாம் அலைகள் பொங்கும் கடல் தூங்குவதில்லை; பொழுதும் விடிவதில்லை; சந்திரனும் குயில் போன்ற பறவை இனமும், தென்றல் காற்றும்கூட சில நேரங்களில் தூங்கும்; உலகத்தில் எல்லாப் பிராணிகளும் தூங்குகின்ற இந்த இரவுக் காலத்தில் என் கண்கள் மட்டும் உறங்கமாட்டா!' என்று அவள் சொல்லும் புலம்பல் உரை, செய்யுள் வடிவமாகக் கிடக்கிறது விவேக சிந்தாமணியில்

சங்கு முழங்குந் தமிழ்நாடன்
தன்னை நினைந்த போதெல்லாம்
பொங்கு கடலும் உறங்காது
பொழுதோர் நாளும் விடியாது!
திங்கள் உறங்கும் புள்ளுறங்கும்
தென்றல் உறங்குஞ் சிலகாலம்
எங்கும் உறங்கும் இராக்காலம்
என்கண் இரண்டும்
உறங்காவே

ஏக்கத்துடனும் ஏமாற்றத்துடனும் கூறுகின்ற தலைவியின் உரையைக் கேட்கும்போது நமது இதயமே இளகிவிடுகிறது.

வேருெரு தலைவி. அவள் சோழ மன்னனின் மேல் உள்ளத்தைச் செலுத்திவிடுகிருள்; மன்னன் அவளைப் பார்த்ததில்லை; ஆனால் மங்கையோ மன்னனை நினைந்து உருகுகிருள்; உடல் மெலிகிருள்; இரவு அவளுக்குத் துயர் சேர்க்கிறது; உறக்கம் அவளைவிட்டு ஓடிவிடுகிறது; இந்த நிலைமையை அவளது தாய் பார்க்கிருள்; பெற்ற நெஞ்சம் பேதுறுகிறது; தன் மகளுக்காக அவளே மன்ருடுகிருள் மன்னனை நோக்கி!

"காவிரிப்பூம் பட்டினத்தில் வாழும் மன்னவனே! கவலை என்பதே இல்லாமல் களிப்போடு இருக்கும் காவலனே! உனக்குக் கப்பம் செலுத்த வந்த மன்னவர்கள் உன் ஒப்புதலுக்காகக் காத்து நிற்கின்றனர். அவர்கள் உறங்குவதற்கு நீ முற்றம் அமைத்துக் கொடுத்திருக்கிருய்; உன்னை அவர்கள் ஒளி விளக்காக எண்ணுகின்றனர், உறக்கம் கொள்ளுகின்றனர்.

"உன் நகரத்தில் மாடுகள் வள்ளைக் கொடியை வாயில் அசை போட்ட வண்ணம் தூங்குகின்றன. உலகத்தில் உள்ள விலங்குகள் உறங்குகின்றன; பறவைகள் நித்திரை செய்கின்றன; வண்டுகள் ரீங்காரத்தை மறந்து உறக்கத்திலேகிடக்கின்றன, குளிர்ந்த நிலமுடைய பொழில்கள்கூட தூங்குகின்றன.

"வாயில்லாப் பிராணிகளும் வயல் வெளிகளும் தூங்குகின்ற இந்த நேரத்தில் எங்கள் அன்புச்செல்வி மட்டும் கண்ணுறங்காது தவிக்கிருள். அவள் உன்மீது கொண்டிருக்கும் மையல்தான் காரணம். உன்னைவிரும்பும் அவளைநோக விடாதே; 'பயப்பட வேண்டாம்! நான் கட்டாயம் மணம் புரிந்துகொள்கிறேன்' என்று நீ அவளிடம் சொன்னுல் அவளது மனத்துயர் மாறும். உறக்கம் வந்து சேரும்" என்று முறையிடுகிருள் தாய்.

இந்தத் தாயின் முறையீடு தனிப் பாடலில் செய்யுள் வடிவமாகத் திகழ்கிறது. அது இது:

மாவுறங்கின புள்ளுறங்கின
வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின எங்கண்மானிரு
கண்ணுறங்கிலள் ஐயகோ!
கோவுறங்கு கடைத்தலைக்குல
தீபவள்ளைகு தட்டிவாய்
ஆவுறங்கு புகாரசஞ்சல
அஞ்சலென்ன வடுக்குமே

இதிலே ஒரு நயம் என்னவென்ருல், முந்திய செய்யுள்களில் தலைவி தான் உறக்கம் கொள்ளாததை, தானே சொன்னுள்; அவளால் சொல்ல முடிந்தது. இந்தச் செய்யுளில் காணப்படும் தலைவி துயரத்தின் முழுச்சாயல்; அதனுல், அவளால் சொல்லக்கூட முடியவில்லை; எனவே, அவளது தாய் 'வக்காலத்து' வாங்கிச் சொல்ல வேண்டிய நிலை வந்துவிடுகிறது.

தமிழ்ப்பித்தன்

தாயும் ஏற்றுக்கொண்ட கடமைக்கு ஏற்ற முறையிலே கேள்விக் கணையைத் தொடுக்கிருள் மன்னனிடம்! "முன்பு பகை கொண்டிருந்த மன்னர்கள் இப்போது கப்பம் செலுத்த வந்திருக்கிருர்கள்; இன்னும் செலுத்தி விடவில்லை; ஆனால் நீ அதற்குள் அவர்கள் நன்கு உறங்கி, ஓய்வு பெற முற்றம் அமைத்துக் கொடுத்திருக்கிருய்; ஆனால் உன்பால் அன்பு கொண்ட என் அருமைச் செல்வியை, உறங்கவிடாமல் நோய் கொடுத்து வருத்துகிருய். இது நியாயமா?" என்று நயம் ததும்பக் கேட்கிருள்.

இதுபோன்ற எண்ணற்ற செய்யுள்கள் இலக்கியத்துக்கும் அதனை யாத்த புலவர்களுக்கும் இன்தமிழ்ப் பண்பாட்டிற்கும் இன்றும் பெருமை தேடித் தருகின்றன.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 10-12-'60 | இதழ் 26

இட்லர் எங்கே?

விசாரணை வேண்டியதில்லை.

யாரையும் கைது செய்யலாம்.

எந்த நேரத்திலும் சிறைப் பிடிக்கலாம்.

எவ்வளவு ஆண்டுகளாயினும் காவல் வைக்கலாம்.

இவ்வளவு அதிகாரமும் கொண்டது ஒரு சட்டம்.

அதற்குப் பெயர் தடுப்புக் காவல்.

இந்தியாவில் வெள்ளையன் முடியாட்சி நடத்திய காலம்.

விழிப்படைந்த பல உணர்ச்சி உள்ளங்கள் அந்த அந்நிய ஆட்சியை எதிர்த்தன.

எங்கள் நாட்டை எங்களிடம் கொடு என்று கிளர்ச்சிகள் நடத்தின.

அதிகார போகத்தை விட்டு விலக விருப்பப் படாத வெள்ளையன் கடுமையான இக்கிளர்ச்சியை ஒடுக்க கொடுமையான சட்டம் ஒன்றை இயற்றினான்.

அதுதான்,

தடுப்புக் காவல் சட்டம்.

இந்தச் சட்டத்தால்,

அன்று இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டுமென்ற "பிறப்புரிமை" கோரி வாதாடிய பல காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர்.

சர்வாதிகார உரிமை நிரம்பிய இச்சட்டத்தை எதிர்த்து,

இச்சட்டத்தால் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

தலைவர்களைக் கைது செய்த இச்சட்டத்தை தொண்டர்களும் மக்களும் தூற்றினர்.

வெள்ளையன் போய்விட்டான்.

விடுதலை கிடைத்துவிட்டது.

எந்தச் சட்டத்தால் கைது செய்யப் பட்டு யார் காவலில் இருந்தார்களோ,

அந்தத் தலைவர்களே நாடாளும் நாயகரானார்கள்

முறைப்படி,

அவர்களைக் கைது செய்த சட்டத்தை, அவர்கள் கைது செய்திருக்க வேண்டும்.

அவர்களைக் கடுஞ்சிறையில் தள்ளிப் பூட்டிய சட்டத்தை அவர்களும் கடுஞ்சிறையில் தள்ளிப் பூட்டியிருக்க வேண்டும்.

அவர்களை உலவ விடாத சட்டத்தை அவர்கள் உலவ விட்டிருக்கக் கூடாது.

அவர்களை மதியாத சட்டத்தை அவர்களும் மதித்திருக்கக் கூடாது.

ஆனால்,

இருந்தவனைப் போகச் சொன்னவர்கள்,

போனவனுக்குப் பின்வந்தவர்கள்,

வந்தவர்களான புதியவர்கள்,

புதிய பொறுப்பை ஏற்றவர்கள்,

போனவன் பாதையை வெறுக்கவில்லை,

இவர்கள் போகக் கூடாதென்று சொன்ன பாதையிலேயே போனார்கள்.

நாடாள வந்த நாயகர்கள், பத்தாண்டுகட்கு முன்னர் இந்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தனர்.

நேர்மையுள்ளவர்கள் எதிர்த்தார்கள்.

நீதி தெரிந்தவர்கள் தடுத்தார்கள்.

இது ஜனநாயக இந்தியா.

இங்கு நடைபெறுவது மக்களாட்சி.

மக்களின் வேண்டுகோளை மதிக்க வேண்டிய ஆட்சி.

இதோ - சர்வாதிகாரச் சட்டம்.

நம்மை அடக்கியாள அந்நியன் வகுத்த சட்டம்.

இருண்ட சட்டம்.

இந்தச் சட்டத்தால் நிறைவேற்ற வேண்டிய ஒழுங்கை-இருக்கின்ற சட்டங்களால் காப்பாற்ற முடியும்.

இது தேவையற்றது. அவசியமற்றது. நாகரீகமற்றது.

சொல்லவேண்டியவர்கள் இதைச் சொன்னார்கள்.

கேட்க வேண்டியவர்கள் கேட்கவில்லை.

"இது நிரந்தரமானதல்ல - தாற்காலிகமானதே."

ஆளவந்தவர்கள் சமாதானங் கூற,

அரசவை ஒட்டுக்குவிட,

தீர்மானம் வெற்றி பெற,

சட்டம் அமுலானது.

நிரந்தரமானதல்ல என்று சொல்லப்பட்ட இச்சட்டம், பத்தாண்டுகள் நிரந்தரமாகி விட்டது.

இந்தப் பத்து ஆண்டுகளில், தடுப்புக் காவல் என்னும் பெயரில் இயங்கிய இச்சட்டத்தால்,

மாநில உரிமைகள்,

மொழிக் கிளர்ச்சிகள்,

நியாயமான வேண்டுகோள்கள்,

இவைகளில் ஈடுபட்ட தலைவர்களும் தொண்டர்களும் அநியாயமாகச் சிறை வைக்கப் பட்டனர்.

இந்தச் சட்டந்தான்,

பஞ்சாப் சிங்கம் தாராசிங்கின் வீரகர்ஜனை, வெளியில் கேட்காதவாறு சிறைக்குள் அடைத்து வைத்திருக்கிறது.

உரிமைகளைச் சாகடிக்கும் இச்சட்டத்திற்கு, பிறரின் உரிமைகளைப் பறித்து, தங்கள் உரிமைகளைக் காப்பாற்ற நினைக்கும் ஆளவந்தோர், இன்னும் மூன்றுண்டுகட்கு உயிர் கொடுத்திருக்கின்றனர்,

சென்ற வாரம் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட இச்சட்டம், இந்த வாரம் மீண்டும் நிறைவேற்றப்பட்டு விட்டது-

இப்பொழுது இச்சட்டத்தை நிறைவேற்றி விடவேண்டும்.

இச்சட்டம் நிறைவேறினால் தான், தங்கள் எதிர்கால எண்ணங்கள் நிறைவேறும்.

இப்படி எண்ணி இச்சட்டத்தை நிறைவேற்றியவர்கள் - தங்கள் எதிர்கால எண்ணங்கள் நிறைவேறிவிட்டதாகவே எண்ணக்கூடும்.

காரணம்.

அடுத்த பொதுத்தேர்தலுக்கு இடையிலிருப்பது இன்னும் ஒரேஒரு ஆண்டு.

காங்கிரஸ் தளர்வதும் - எதிர்க்கட்சிகள் வளர்வதும், அவர்கள் அறிந்த ஒன்று.

வளர்ந்துவரும் எதிர்க்கட்சிகள் அடுத்துவரும் தேர்தலில் என்ன பாடம் கற்பிக்குமென்பதையும் அவர்கள் அறிவர்.

தங்கள் கட்சியின் தளர்ச்சியைத் தடுக்க முடியாவிட்டாலும் - எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியையாவது தடுக்க வேண்டும்.

இந்த எண்ணத்தில் நாடாளும் நாயகர்கள் கொண்டுவந்த சட்டமே,

தடுப்புக்காவல் சட்டம்,

ஆட்சி எங்கள் கையில்,

சட்டம் எங்கள் கையில்,

சட்டத்தை நிறைவேற்றும் ராணுவம் எங்கள் கையில்,

யார் என்ன செய்ய முடியும்?

இந்தக் குரல் உங்கள் காதுகளில் விழுகிறதா?

இனி,

இந்தச் சட்டம்,

யார் யாரைப் பிடிக்குமோ?

எவர் எவரை அடைக்குமோ?

எதை எதை ஒடுக்குமோ?

என்னென்ன செய்யுமோ?

ஆனாலும் ஒரு மகிழ்ச்சி,

இட்லரின் சட்டங்களை விடவா இது கொடியது?

ஆமாம்-இட்லரை எங்கே?

வெண்பாப் போட்டி-11.

★

திருக்குறள் தென்றல் வெண்பா!

இறுதி நாள் 24-12-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

24-12-60 வரை திருக்குறள் தென்றல்வெண்பா தொடர்ந்து இடம் பெறும்

ஆசிரியரவர்கள் சுற்றுப் பயணத்தில் இருப்பதால் "முடிவின் தொடக்கம்" அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து இடம் பெறும்.

மல்லிகைப்

33. இன்பப் பெரு வெள்ளம்

தங்கம் இரவில் வெளிக் கிளம்பிச் சென்றதும், தற்கொலை செய்ய முயன்றதும், வீட்டுக்குத் திரும்பிவந்ததும் யாருக்கும் தெரியாது. வீட்டில் அவளைப் பற்றிய எண்ணமே யாருக்கும் இல்லாதது போல் காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. அண்ணாமலைப் பண்டிதராகிய கயிலாய மாமா, தங்கத்தின் திருமணத்திற்குத் தானே ஒருநாள் குறித்தார். அவரே முன்னின்று திருமணத்திற்கு ஆக வேண்டிய காரியங்களையெல்லாம் கவனித்தார். திருமணத்தை எங்கே நடத்துவது என்ற பிரச்சினை வந்தபோது கயிலாயம், கதலிப் பட்டணத்தில் ஜமீந்தார் மாளிகையிலேயே நடத்தலாம் என்று சொன்னார். ஆனால், தான் வாழ்க்கைப் பட்ட வீட்டில்தான் தன் அருமை மகளுக்குத் திருமணத்தை நடத்திக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்பது மரகத அம்மாளின் ஆசை. ஆகவே, கயிலாயம் தன் தங்கையின் எண்ணத்திற்கு இசைய வேண்டியதாயிருந்தது.

நெய்யூரிலேயிருந்த அந்தக் கந்தசாமி வாத்தியாரின் சின்னஞ்சிறிய வீட்டிலே நாளுக்குநாள் புதுப் பொலிவு தோன்றிக் கொண்டிருந்தது. வீடு முழுவதும் வெள்ளையடித்துப் புத்தம் புதிய அலங்காரங்கள் பல செய்யப்பட்டன. இத்தனை ஏற்பாடுகளையும் கண்டு மனம் புழுங்கிக் கொண்டு வெளியே சொல்ல முடியாமல் மனத்துக்குள்ளே வேதனைப் பட்டுக் கொண்டிருந்த இதயம் ஒன்று இருந்தது என்றால், அது தங்கமாகத் தான் இருக்கும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், இந்த ஏற்பாடுகள் இன்னொரு பெண்ணுக்கு மனவருத்தம் அளிக்கூடியவையாக இருந்தன. அந்தப் பெண் வேறு யாருமில்லை. அது தங்கத்தின் அருமைத் தோழி ராதாதான். தங்கத்திற்குத் தன்னால் காதலிக்கப்பட்டவனும், தன் அன்புள்ளத்தில் என்றென்றும் குடியிருந்து வருபவனாகியவனும் ஆகிய நடராசனைத் திருமணம் செய்து வைத்து விடவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்த ராதா, இந்த ஏற்பாடுகளைக் கண்டு தன் எண்ணம் சித்திக்காத நிலையில் ஏற்பட்டதற்காக வருந்திக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் தன் வருத்தத்தை வெளியில் யாரிடமும் சொல்ல வில்லை. தங்கத்திடம் கூடச் சொல்லவில்லை. எல்லாம் நடக்கிற படி நடக்கட்டும் என்று மனத்தை அமைதிப் படுத்திக் கொண்டு அவள் பேசாமல் இருந்தாள்.

நடராசன் அந்தநள்ளிரவில் சொன்ன உறுதி மொழியில் தங்கத்திற்கு ஓரளவு நம்பிக்கை. ஆகையால், அவள் அடிக்கடி தன் மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

தன் மகள் முகத்தில் செழிப்பபே இல்லாததை மரகத அம்மாள் கவனிக்கத் தவறவேயில்லை. அவள் மெதுவாக ஒருமுறை தன் கணவரை அணுகி, "என்னங்க தங்கத்தைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறதே?" என்று கேட்டாள். அதற்குக் கந்தசாமி வாத்தியார் தாமும் வருத்தத்துடன் பதிலளித்தார். "என்ன செய்வது? உன் அண்ணன் சொல்லையும் மீற முடியவில்லை. என் மகள் நிலையையும் பொறுக்கமுடியவில்லை" என்று கந்தசாமி வாத்தியார் ஈனக்குரலில் கூறியபோது மரகத அம்மாளுக்கு மனத்தில் சுருக்கென்று முள் தைத்தது போலிருந்தது.

குறிப்பாகக்கூடத் தன் மனம் வருந்தும்படி இதுவரை தன் அருமைக் கணவர் பேசி அவள் கண்டதேயில்லை. இன்று உன் அண்ணன் என் மகள் என்று அவர் தம்மையும் தன்னையும் பிரித்துப் பேசுவதை அவளால் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை. கலங்கிய கண்களுடன், குமுறும் உள்ளத்துடன் அவள் அவரிருந்த இடத்தைவிட்டுப் போவதற்காகச் சட்டென்று திரும்பினாள். அப்போது அவர்கள் இருந்த கூடத்திற்குள் கயிலாயம் திடீரென்று நுழைந்தார். தன் தங்கை மரகதத்தின் முகத்தைக் கண்ட கயிலாயம், அவள் ஏதோ மனவேதனையுடன் இருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறவில்லை. தன் மைத்துனர் நிலையும் அவளைக் காட்டிலும் சிறந்ததாக இல்லை என்பதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

'கந்தசாமி உங்களுக்குள் என்ன மனவருத்தம்?' என்று கேட்டார் கயிலாயம்.

பதில் இல்லை.

"மரகதம், உங்களுக்குள் என்ன சச்சரவு?" என்று மறுபடியும் கேட்டார் கயிலாயம்.

அதற்கும் பதிலில்லை.

"கணவன் மனைவி விவகாரத்திடையே மூன்றாவது மனிதன் ஒருவன் தலையிடுவது என்றும் தகுதியுடையதல்ல" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு கயிலாயம் அந்தக் கூடத்தைவிட்டு வெளிச் செல்லுவதற்காகத் திரும்பினார்.

"அண்ணா! அண்ணா!" என்று மரகதம் கூவியழைத்தாள்.

கயிலாயம் சட்டென்று அங்கே நின்றார்.

"மரகதம்!" என்று பாசம் இழைந்தோடும் மெல்லிய ஓசை அவரிடமிருந்து எழுந்தது.

"அண்ணா! இந்தத் திருமணம் வேண்டாம் அண்ணா!" என்று மரகத அம்மாள் கதறினாள்.

"அசடே! இன்னொருமுறை அப்படிச் சொல்லாதே. கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த ஒரு மகளுக்கு மங்கல காரியமாக நடக்கப்போகும் திருமணத்தை எண்ணி மகிழ்ந்து வாழ்த்த வேண்டிய நீயா இப்படிப் பேசுவது? தன் மகளுடைய விருக்கும் ஒரு நன்மையைத் தாயே தடுப்பதா?" என்று கூறினார் கயிலாயம். அவர் சொற்களில் எப்போதும் இருக்கக்கூடிய உறுதியான பாணி அப்போதும் இருந்தது.

"அண்ணா, என் மகள் வாழ்நாள் முழுவதும் மனங்கலங்கிக்கொண்டிருக்கச் செய்யும் இந்தத் திருமணம் எப்படியண்ணா மங்கல காரியமாகும்?' என்று உருக்கத்துடன் கேட்டாள் மரகத அம்மாள்.

இந்தச் சமயம் தங்கம் அந்தக் கூடத்திற்குள்ளே எதற்காகவோ நுழைந்து அடியெடுத்து வைத்தாள். ஆனால், தன்தாயும் தந்தையும் இருந்த சோக நிலையைக் கண்டதும் அவள் பின்வாங்கி அடுத்த அறையிலேயே நின்று விட்டாள். அண்ணாமலைப் பண்டிதர் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு கூடத்தின உட்புறமாகத் திரும்பியிருந்த படியால், தங்கம் அங்கு நுழைந்ததையோ, அடுத்த அறையில் நின்றுகொண்டிருந்ததையோ கவனிக்கவில்லை.

"மரகதம், நீ சிறிதும் புரியாமல் பேசுகிறாய். நீ உறுதியாக நம்பு. உண்மையில் நான் உன் தங்கத்திற்கு நன்மை தான் செய்கிறேன். அவள் யாரை ஆசையோடு நேசிக்கிறாளோ அவனுடன் தான் அவளை இணைத்து வைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

"இல்லை, உங்கள் ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை" என்று அவர் எதிரில் ஓடிச் சொல்ல வேணடும் போலிருந்தது தங்கத்துக்கு. ஆனால், அவள் உடல் அசையவில்லை; குரலும் வெளிப்படவில்லை.

"தான் நடராசனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தங்கம் தெளிவாகச் சொல்லி விட்டாள். அவள் இன்பமாக வாழவேண்டுமென்றால், அவள் எண்ணப்படி மணமுடித்து வைத்தால் தான் நல்லது. அதுதான் அவள் வாழ்வில் கலங்காமல் களிப்போடு இருக்க நாம் வழிசெய்து கொடுப்பதாகஇருக்கும். அவள் மறுக்கின்ற மாப்பிள்ளையைக் கொண்டு வந்து மணமுடித்து வைத்து அவள் இவனைத்தான் நேசிக்கிறாள் என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தால் அது எப்படிப் பொருந்தும்?" என்று கந்தசாமி வாத்தியார் துயரங் கலந்த சினத்தோடு பேசினார். கயிலாயத்தின் எதிரில் அவர் இதுவரை கடுகடுப்பாகப் பேசியதே கிடையாது. கயிலாயத்தை அவர் ஒரு மகான் என்று மதித்திருந்தார். ஆனால், தன் மகள் திருமண விஷயத்தில் மைத்துனர் கயிலாயம் காட்டும் பிடிவாதத்தை அவரால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

கந்தசாமி வாத்தியாரின் கோபமான பேச்சுக்கள், கயிலாயத்திற்குச் சிரிப்பைத்தான் வர வழைத்தன. அதுவும் வெறும் புன் சிரிப்பாகத்தான் வந்தது.

"கந்தசாமி, மரகதம், நான்உங்களை மிகவும் மனம் நோகச் செய்து விட்டேன். உங்கள் விருப்பப்படி நடராசனையே தங்கம் திருமணம் செய்து கொண்டு நன்றாக வாழட்டும். அதுவும் எனக்கு மகிழ்ச்சியையே தரும். என்றார் கயிலாயம்.

"அண்ணா, முழுமனத்தோடுதான் சொல்லுகிறீர்களா?' என்று தன் ஆனந்தத்தை இடைமறிந்த சந்தேகத்தோடு கேட்டாள் மரகதம்.

கந்தசாமி வாத்தியாரும் தன் மைத்துனர் என்ன சொல்லப்போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"கந்தசாமி, மரகதம், உங்கள் மனப்போக்கை நான் இப்போதுதான் புரிந்துகொண்டேன் என்பதில்லை. முதலிலேயே தெரிந்துகொண்டுவிட்டேன். கடைசியில் உங்கள் எண்ணப்படியே திருமணத்தை நடத்திவிடுவதென்று நானே முடிவு செய்துவிட்டேன். இதோ நீங்கள் எதிர்பார்த்தபடியே திருமண அழைப்பிதழும் அச்சடித்துக் கொண்டுவந்து விட்டேன்" என்று சொல்லித் தாம் கையில் கொண்டுவந்திருந்த ஒரு கட்டைப் பிரித்து அவர்கள் இருவர் கையிலும் ஆளுக்கோர் அழைப்பிதழ் கொடுத்தார்.

அந்த அழைப்பிதழைப் பார்த்த உடனே அவர்கள் கண்கள் வியப்பால் விரிந்தன. கொட்டை எழுத்துக்களில் நடராசனுக்கும் தங்கத்துக்கும் என்று இருந்ததைப் பார்த்தவுடன் அவர்கள் கொண்ட ஆனந்த உணர்ச்சி அளவிடற்கரியதாயிருந்தது. ஆனால், அழைப்பிதழை வரிவரியாகப் படித்த போதுதான், வியப்புணர்ச்சி மேலோங்கியது. அண்ணாமலைப் பண்டிதர் என்ற கயிலாயத்தின் மகன் திருவளர் செல்வன் நடராசனுக்கும், நெய்யூர் கந்தசாமி வாத்தியாரின் மகள் திருவளர் செல்வி தங்கத்துக்கும் என்று இருந்த அந்தச் சொற்றொடர் கந்தசாமி வாத்தியாரையும், மரகதஅம்மாளையும் பெருத்த ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

"அண்ணா, நடராசன் மரகத மகனா?" என்று கூவினாள் உங்கள் அம்மாள்.

"உண்மைதானா?" என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்,

'உண்மை இது மட்டுமல்ல, தொடக்க முதலே நான் என் மகன் நடராசனுக்குத்தான் உங்கள் தங்கத்தைத் திருமணம் செய்துவைக்கச் சொல்லிவருகிறேன் என்றார் கயிலாயம்.

"நீங்கள் சொல்வது புரியவில்லையே?' என்று கேட்டார் கந்தசாமி.

தலைமைநிலைய அறிக்கை (அ) 11/60

தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், வ. ஆ. மாவட்டம் வேலூர் நகரில் 1961 சனவரித் திங்கள் 7, 8 (சனி, ஞாயிறு) நாட்களில் நடைபெறும்.

'அறிவகம்,' சென்னை-13.,
30—11—1960

கே. ஏ. மதியழகன்,
தலைமை நிலையச் செயலாளர்.

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

"ராஜுவுக்குத் தங்கத்தைக் கொடுங்கள் என்று கேட்டேன் நான். நீங்கள் மறுத்துவிட்டீர்கள். நடராசனைத் தான் தங்கம் மணம்புரிய விரும்புகிருள் என்று சொன்னீர்கள் நடராசனும் ராஜுவும் ஒருவரே தான் என்பது தெரியாததால் நீங்களும், தங்கமும் என் மேல் வெறுப்புக்கொள்ளும்படி ஆகிவிட்டது. இதில் நானும் ஒருவகையில் ஏமாந்து போயிருக்கிறேன். நடராசன் மேல் தங்கம் முதலில் வெறுப்புக் கொண்டிருந்தாள். ஆகையால் அவள் அன்பைக் கவருவதற்காக அவன் ராஜுவாக வேடம் போட்டான். தங்கமும், ராஜுவை விரும்பினுள். அவள் ராஜுவிடம் வெறுப்புக்கொள்ளும்படியும், நடராசனிடம் அன்புகொள்ளும்படியும் எப்படி மாறுதல் ஏற்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. என்ருர் கயிலாயம்.

"மைத்துனரே! நீங்கள்தான் இரட்டைவேடம் போட்டீர்களென்ருல், உங்கள் மகனும் இரட்டைவேடம் போட்டிருக்கிருன். நடராசன்தான் உங்கள் மகன் என்று எப்போது எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? என்று சொல்லவில்லையே!" என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

'கந்தசாமி, எனக்கு உயிருக்குயிரான ஒரு மனைவி கிடைத்திருந்தும். நான் அவளை அலட்சியப்படுத்தி குணவதியின் அழகில் மயங்கி அவளை இரண்டாந்தாரமாகக் கட்டிக்கொண்டேன் அல்லவா! இந்தக் குணவதி பெயரளவில் குணவதியே தவிர, மிகுந்த குணக்கேடியாக இருந்தாள். ஒருநாள், இவள் செய்து வைத்திருந்த வடையை என் மூத்தாள் மகன் ராஜு எடுத்துத் தின்றுவிட்டான் என்பதற்காக அவன் கையை அப்படியே அறிவாளால் துண்டாக வெட்டிவிட்டாள், இது ஊராருக்குத் தெரியாது. இந்தக் கொடுமையையும் பொறுத்துக் கொண்டு இருந்த என் மூத்தாள் கற்பகத்தின் பேரில் குணவதி பழி கிளப்பி விட்டாள்.

ராஜு ராஜு என்றுதான் அன்போடு பாராட்டி வளர்த்து வந்த இந்தக் குழந்தையை அவள் மானமிழந்து பெற்றதாக ஊருக்குள் பேச்சுக் கிளப்பி விட்டாள். குணவதியின் சீற்றத்திற்கு அஞ்சி நான் கற்பகத்திடம் வெறுப்பாக நடப்பதாகக் காட்டிக் கொண்டேனே தவிர, உண்மையில் அவளிடம் அன்பும் இரகசியத்தொடர்பும் வைத்திருந்தேன். இதை நான் வெளிப்படையாகக் கூறி என் மனைவியைக் காப்பாற்றும் வன்மையில்லாத கோழையாக அப்போது நான் இருந்தேன். கற்பகமோ, மானம் பொறுக்க முடியாமல் தன் அருமைக் குழந்தையுடன் கிணற்றில் விழுந்து இறந்து விட்டாள். கிணற்றில் விழுந்து அவள் இறந்து விட்ட போதிலும், இந்தக் குழந்தை வெளிப் படுத்தப் பட்ட போது பிழைத்துக் கொண்டு விட்டது. பிழைத்தக் கொண்ட இந்தக் குழந்தையைத்தான் முருகேச வாத்தியார் வளர்த்து வந்திருக்கிருர். அவர் அவனுக்கு நடராசன் என்று பெயர் வைத்து வளர்த்திருக்கிருர். கிணற்றில் விழும்போது மண்டையில் அடிப்பட்டதால் அதிர்ச்சியடைந்து அவன் மூளையில் தாக்கியதால் அவன் பைத்தியமாக வளர்ந்திருக்கிருன் அவனுடைய வரலாற்றை முருகேச வாத்தியார் கூறிய பிறகு அவன் என் மகன்தான் என்று தெரிந்து கொண்டேன். அதனுல் தான் நான் அவனை மருத்துவ விடுதி அழைத்துச் சென்று ஒளி மருத்துவம் புரியும் படி ஏற்பாடு செய்தேன். உங்களுக்கோ நான் அவனுக்குக் கல்வி போதிப்பது போல் நடிப்புக் காட்டினேன். நான் இங்கு வந்ததுமே, குணவதி எப்படியோ என்னைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தன் மகன் சுந்தரேசனை அனுப்பி என்னை உளவறிந்து வரச் செய்திருக்கிருள். அவன் என்னை மட்டுமல்ல, நடராசனையும் இன்னுர் என்று தெரிந்து கொண்டு விட்டான். அவனுக்கு வந்த இரண்டு கடிதங்கள் மூலமாகவும் என் திருவாசகப் புத்தகம் திருட்டுப் போனதன்மூலமாகவும், நான் அவன் என்னைப் புரிந்து கொண்டுவிட்டான் என்பதையும், அவன் ஒழுக்க மற்றவன் என்பதையும் தெரிந்து கொண்டேன். அவனை மறைமுகமாகத் திருத்த முயன்று தோல்வியடைந்தேன்

நடராசன் தங்கத்தை விரும்பினன். தங்கமோ சுந்தரேசன்மீது மோகம் கொண்டிருந்தாள். இதையும் நான் அறிந்துகொண்டேன். சுந்தரேசன் விஷயம் தாஞக நடந்தது. நடராசனுக்காக நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டேன். அவனைப் பட்டணத்து வாலிபனுக மாற்றினேன். கையூனம் இல்லாதவனுகத் தோற்றமளிக்கச் செய்தேன். தங்கம், அவனேடு பழகும் படியான சூழ்நிலையை உருவாக்கினேன். தங்கமும், அவன்மீது ஆசைகொண்டாள். என் எண்ணம் இந்த முறையில் நிறைவேறி விட்டது. என்று மனமகிழ்ந்தேன். ஆனல், அவள் மறுபடியும், புதிய ராஜுவைவிட்டு பழைய நடராசன் பக்கம் எப்படித் திரும்பினுள் என்பதுதான் எனக்கு மர்மமாக இருக்கிறது." என்ருர் கயிலாயம்.

"மர்ம மனிதர்களுக்கும் விளங்காத மர்மங்கள் உலகில் இருக்கின்றன" என்று, கந்தசாமி வர்த்தியார் புன்சிரிப்புடன் கூறினுர்.

"அப்புறம் ...?" என்று கேட்டாள் மரகத அம்மாள் தன் அண்ணனை நோக்கி.

"அப்புறம் எல்லாவற்றையும் நீயே யூகித்துக்கொள், ராஜுவாக இருந்தாலும் சரி, நடராசனுக இருந்தாலும் சரி, தங்கம் என் மகனைக் கட்டிக் கொள்ளச் சம்மதித்துவிட்டாள். அது போதும் எனக்கு!" என்று சொல்லி விட்டு வெளியே வந்தார் அண்ணுமலைப் பண்டிதர். அவரைப் பின்தொடர்ந்து கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் வந்தார்கள். கூடத்தையடுத்த அறையில் சுவரில் சாய்ந்து கொண்டிருந்த தங்கத்தைக் கண்டதும், "நீயும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாயா?" என்று கேட்டார் கயிலாயம்.

தங்கம் பதில் சொல்லவில்லை.

அவள் கண்களில் அசாதாரணமான ஓர் ஒளி வெளிப்பட்டுத் தெரிந்தது. அவள் முகம் விரிந்த மல்லிகைப் பூவைப்போல் மலர்ந்திருந்தது. அந்த முகத்திலே தெரியும் இன்பக்காட்சியொன்றைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் அவள் மேலே நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் உதடுகள் புன்சிரிப்புடன் மின்னிக்கொண்டிருந்தன. வீட்டுக் கொல்லைப்புறத்திலே இருந்த அந்த மல்லிகைப் பந்தலும், அதனடியில் முதன் முதலாக அவள் கண்ட நடராசனுடைய அந்தக் கவர்ச்சியான முகமும் அவள் மனக்கண் முன் தோன்றின. அந்த இனிய காட்சியைக் கண்டவாறே அவள் தன்னை மறந்த நிலையில், இன்பப்பெரு வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தாள்!

முற்றிற்று.

சந்தாதாரர்களுக்கும் வாசகநேயர்களுக்கும்

தென்றல் பொங்கல் மலர், 1961.

அஞ்சல் மூலம் பெற விரும்பும் சந்தாதாரர்களும் ஏனைய வாசக நேயர்களும், 30-12-60 தேதிக்குள் ரு 2-25 அனுப்பி தங்கள் பிரதிகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிருேம்.

ஏஜண்டுகள் உள்ள இடங்களில் ஏஜண்டுகளிடம் பதிவு செய்துகொள்ள வேண்டுகிருேம்.

நிர்வாகி

தென்றல்.

அன்புள்ள வாசகர்களே!

முப்பது வாரங்களாக நான் எழுதிவந்த மல்லிகைப் பந்தல், இப்பொழுது முடிவடைந்து விட்டது. நான் கதை யெழுதிவரும் போதே, பல நண்பர்கள் இந்தக் கதையை நல்லதோர் துன்பியல் காவியமாக முடிக்க வேண்டும் என்றும், அப்பொழுதுதான் சுவையாக இருக்கும் என்றும் எனக்குக் கூறினுர்கள். இடையிடையே என்னைப் பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் கடிதம் எழுதிய வாசகர்கள் பலர். நேரில் கண்டு முற்புகழ்ச்சி கூறியவர்களும் சிலர்.

இந்தக் கதைதான் நான் பத்திரிகையில் முதன் முதலாக எழுதத் தொடங்கிய தொடர்கதை. இதை எழுதத் தொடங்கிய காலத்திலேயே மனம் வெறுத்து மூன்று நான்கு வாரங்களோடு நிறுத்திவிடும்படியான சூழ்நிலைகள் உருவாயின. எழுத்துரிமைக்குத் தடை விதிக்கக்கூடாதென்ற பரந்த உள்ளமுடையவரும், என் பழைய நண்பருமான ஆசிரியர் கண்ணதாசன் கொடுத்த ஆர்வமும் தூண்டுதலுமே இந்தக் கதை இடைவிடாது தொடர்ந்து வருவதற்குக் காரணமாயிருந்தன.

ஆர்வமூட்டிய ஆசிரியருக்கும் வாசகர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மல்லிகைப் பந்தல் கதைப் போக்கு முடிவுபற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்துக்களை எனக்கு எழுதுவீர்களானுல் அவை பின்னுல் உருவாகும் என் கதைகளுக்கு நல்ல வழி யமைத்துக் கொடுப்பதாயிருக்கும்.

அன்புள்ள,

நாரா நாச்சியப்பன்

4—12—60 அன்று தாம்பரத்தில் நடைபெற்ற

செங்கற்பட்டு மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டு முடிவுகள்.

1. காஞ்சியில் உள்ள பச்சையப்பன் கல்லூரிக்குப் போதுமான இடவசதியும், பாதை வசதியும் சரியாக இல்லாமல் இருக்கிறது அத்துடன் மாணவர்களும் பல வழிகளில் வசதியற்ற நிலையிலேயே கல்லூரியில் இருந்துவருகின்றனர். எனவே, கல்லூரிக்கு நல்ல பாதை வசதியும் மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும செய்துதர வேண்டும் என்று மாநில சர்க்காரை இந்த மாணவர் மாநாடு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறது.

2. மாறும்பதியில் முறைப்படி ஒரு உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்த எல்லா வகையிலும் நியாயம் இருந்தும், அதற்கான பங்கீட்டுத் தொகையை ஊர் மக்கள் ஒன்று திரட்டித் தருவதற்கு ஒப்புதல் அளித்திருந்தும், இதுவரையில் உயர்நிலைப் பள்ளியைத் துவக்காமல் சர்க்கார் அலட்சியம்செய்து வருவது கண்டு மாநாடு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், பள்ளியைக் கட்டி முடிப்பதற்கு ஆட்சியாளர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

3. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட மொழிக் கலவரத்தின் காரணத்தினால் நூற்றுக் கணக்கானவர்கள் தங்களது இன்னுயிரையும் காணிக்கையாக்கியுள்ளார்கள் என்பதை நன்கு உணர்ந்திருந்தும்கூட, தற்போது இலங்கை அரசாங்கம் அங்கு வாழும் தமிழர்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும், சிங்களத்தை பலாத்காரமாகவும் சட்டபூர்வமாகவும் திணிப்பது குறித்து இந்த மாநாடு அவர்களது செயலுக்கு வருந்துகிறது. அவர்களது போக்கினையும் வன்மையாகக்கண்டிக்கிறது. அத்துடன் தமிழர் களின் நலனில் அக்கரையுள்ள ஒருவரைத் தூதுவராக நியமிக்க வேண்டும் என்று இந்திய சர்க்காரை இந்த மாநாடு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.

4. திருச்சியை அடுத்த திருப்பராய்த்துறை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் வடமொழி (சமஸ்கிருதம்) மந்திரத்தைச் சொல்ல மறுத்த 14 மாணவர்களை பள்ளியை விட்டு வெளியேற்றியது குறித்து, பள்ளி நிர்வாகிகளின் போக்கினை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆட்சியாளர்களுக்கு சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை எந்த விதமான முயற்சியையும் எடுக்காதது குறித்து வருந்துவதுடன், ஆட்சியாளர்களின் போக்கினை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

5. சென்னை சர்க்காரின் மும்மொழிக் கொள்கை மாணவர்களின் திறமையைக் குறைப்பதாய் இருப்பதுடன், இந்தி மொழியையும் மாணவர்கள் மீது திணிக்க முயற்சிக்கிற ஆட்சியாளர்களின் போக்கினை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது மாணவர்களின் திறமையை உயர்த்த ஆங்கிலம்-தமிழ் ஆகிய இரு மொழிகள் மட்டும் போதும் என்று ஆட்சியாளர்களை இந்த மாநாடு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறது.

6. சர்க்கார் அலுவலாளர்கள் அரசியல் துறையில் ஈடுபடக் கூடாது என்று சட்டம் இருந்தும், அந்த விதிமுறைகளுக்கு மாருக—விதி முறைகளைப் புறக்கணிக்கும் வகையில்—இந்திய செய்தித்துறை இயக்குனர் கு. ராஜவேலு அவர்கள் அண்மையில் குடந்தையில் நடைபெற்ற மாணவர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டிருப்பது குறித்து இந்த மாநாடு தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

7. மதுராந்தகம் வட்டம், அகிலி என்ற கிராமத்தில் உடனடியாக மாணவர்கள் கல்வி பயிலுவதற்கான பள்ளி ஒன்றை விரைவில் துவக்க வேண்டும் என்று ஆட்சியாளரை இந்த மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது

8. அண்மையில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல்களில் தி. மா. மு. கழகத்தைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் பொதுக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுகுறித்து, இந்த மாநாடு தனது மகிழ்ச்சியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

மண்மகள் காதல்

வா. செ. பழநிசாமி, எம். ஏ. பி. எல்.

தண்சுவை அன்பு நீரைத் தன்னுடல் முழுதும் பெய்து
எண்ணிலா இன்பம் நல்க எழிலுடன் வருவன் என்று
மண்மகள் நீல வானில் மாரியின் வருகைக் காகக்
கண்விழித் திருந்த நாட்கள் கணக்கில; காதல் வேட்கை
பொங்கிட நாளும் ஏங்கிப் புசிப்பதும் மறந்து நின்றுள்.
செங்கதிர்ச் செல்வன் காலைச் சிரிப்பினை வீசிப் பார்ப்பான்.
நங்கையின் எதிர்ப்பைக் கண்டு நண்பகல் எரிந்து நிற்பான்.
மங்கையின் மனத்தை மாற்ற மாலையில் வித்தை செய்வான்
நிலவுதன் ஒளியைக் கொட்டி நெஞ்சினைக் கவரப் பார்ப்பான் ;
நிலமகள் அஞ்ச எங்கும் நிறையிருள் காட்டி நிற்பான்,
உலகெனும் பெண்ணை வெல்ல உடுக்களோ சிமிட்டும் கண்கள்.
குலமகள் உறுதியோடு குளிர்மழைக் காக நிற்பாள்.
ஆர்கலி ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வன், இன்பக்
கார்முகி லன்பன் ஓர்நாள் கரைபுரண் டோடி வந்தான்;
தேர்வரும் ஒலிபோ லெட்டுத் திக்கெலாம் இடியின் ஓசை ;
போர்முனை வாள்போல் மின்னல்-புன்சிரிப் பாகும் ;காற்றின்
பேர்ஒலி-காதல் கீதம் ; பெருமழை-அவனின் முத்தம் ;
பார்மகள் தனக்கு இன்பம் பகலொடு இரவாய்த் தந்தான்.
ஊர்தனில் அவனைப் பற்றி ஒவ்வொரு வீட்டில் பேச்சு ;
வார்குழல் மங்கை யாளும் மட்டிலா மகிழ்ச்சி கொண்டாள்.
நின்றது பருவக் காற்றின் நெடுமழை ; மகிழ்ந்து மக்கள்
சென்றனர் வேலைக் காக ; செழும்வனப் பெங்கும் ; ஆனல்
இன்றிருந் தாண்டு ஒன்றுக் கேங்கிட வேண்டு மன்றோ
என்றிவன் வருவன் என்னும் ஏக்கமே கொள்வாள் மங்கை,

சொல்லாய் ஈதில் யாதாவாய் ?

மு. முகமது மூசா.

நீருக் கென்று நிறமில்லை
நிலையாய் ஏதும் வடிவில்லை ;
காருக் கிடையில் கறுப்பாகும்
'காக்கா' கடையில் சிவப்பாகும்
மோருக் கிடையில் தமிழ்போற்றும்
முல்லைப் பூவின் நிறமாகும்
ஊருக் கோயிற் குளத்துள்ளே
ஊறும் நீரின் நிறம்பச்சை.

அண்டா நீரின் உருவேறு
அகழின் நீரின் உருவேறு
குண்டா நீரின் உருவேறு
குவளை நீரின் உருவேறு
தண்டா மரையின் இலைமீதில்
தவழும் நீரின் உருவேறு
கொண்டான் இழந்த குலமங்கை
கொட்டும் கண்ணீர் உருவேறு.

இடத்திற் கேற்ற வடிவேற்கும்,
இருப்பிர் கேற்ற செயல்செய்யும்.
குடத்தில் வீழில் தமிழன்போல்
குந்திக் கிடக்கும் ; குட்டைக்குள்
அடித்துப் போட்ட புளிபோல
அப்பிக் கிடக்கும் ; திருக்கோயில்
மடத்தில், தலத்தில் ; இங்கெல்லாம்
மகிமை பெற்ற பொருளாகும்.

கடலிற் சீறும் புலியாகும்
கல்லில் வளஞ்செய் ஆறுகும்
குடிலில் பசிதீர் உணவாகும்
குளிரில் உறையும் பனியாகும்
அடுப்பில் கொதிக்கும் புனலாகும்
அழிக்கும் வெள்ளப் பெருக்காகும்
துடிக்கும் தமிழா, இதுபோதிற்
சொல்லாய், ஈதில் யாதாவாய் ?

நூல் நயம்

முழுமதி.

பல்சுவைத் திங்களிதழ்

விலை. 25 காசு

ஆசிரியர் : ஆநூர். சொ. ஆனந்தன், பி. எஸ். சி; பி. டி. (எம். ஐ. டி.)

பதிப்பாசிரியர் : வெ. நாமதேவன். பி. ஏ.

வியாபாரத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளும்-சுய விளம்பரத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பஞ்சமில்லாது பெருகி வளர்ந்து வரும் நேரமிது.

இந்தச் சமயம், உயர்ந்த முறையில் சிறந்த பத்திரிகையொன்றை வெளியிட வேண்டுமென்ற ஆர்வத்தில்-விருப்பத்தில்-காகிதக் கட்டுப்பாட்டையும் தட்டுப்பாட்டையும் நினையாது-ஆசிரியர் சொ. ஆனந்தனும் - பதிப்பாசிரியர் வெ. நாமதேவனுமாகச் சேர்ந்து தங்களின் பல்சுவைத் திங்களிதழான "முழுமதி"யின் முதலிதழை சிறப்புடன் வெளியிட்டு-எடுத்த முயற்சியில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

இந்த இதழில்-பேராசிரியர் டாக்டர். அ. சிதம்பரநாதன், கவிஞர் கண்ணதாசன், கி. வா. ஜகந்நாதன், அகிலன், சாண்டில்யன், பி. சி கணேசன், தமிழ்வாணன், கோமதி சுவாமிநாதன், அமலன், எல்லார்வி, ஏழிசைவல்லி, நாரா. நாச்சியப்பன், வசுமதி ராமசாமி அய்க்கன், ஆகிய சிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் - கவிதைகள் - கதைகள் இடம் பெற்று புதுமதியாகிய முழுமதியை தமிழ்மணங் கமழச் செய்திருக்கின்றன.

"எப்படிச் சொல்வேனடி"? என்னும் கவிஞர் கண்ணதாசன் எழுதிய தமிழ் கொஞ்சும் இசைப்பாடலுக்கு ஓவியர் 'லதா' போட்டிருக்கும் எழில் சிந்தும் முகப்பு-கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது.

மொத்தத்தில் இதழில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் - கவிதைகள் - கதைகள் அனைத்துமே ரசிக்கத்தக்கதாகவும் சுவைக்கத்தக்கதாகவுமே உள்ளன.

உள்ளே அமைந்திருக்கும் சித்திரங்களில் - இன்னும் சற்றுச் சிரத்தை செலுத்தியிருக்கலாம்.

90 பக்கங்கள், நல்ல அமைப்பு, 25 காசுகள், தாராளமாகத் தரலாம்.

பல்லவர் கோன் புகழ் நந்தி

நிலம்பல சென்று களம்பல கண்டான்.

போர்பல நிகழ்த்தி பேர்பல கொண்டான்.

விண்தொடக் கொடி கட்டியாண்ட மாமன்னர் பலரின் முடிகளை மண் தொடக் கவிழ்த்து அவர்தம் மண்டலங்களைக் கவர்ந்தான்.

கல்வியிலே அவன் அறிவாளி.

கொடுத்துக் காப்பதிலே கொடையாளி.

புலவர்கள் பாடினர் அவன் புகழை.

இளம் பூவையர் நாடினர் அவன் உறவை.

ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்னர், காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு-அவன் கட்டிப் பறக்கவிட்ட காளைக்கொடி, தமிழகத்தில் மட்டுமல்ல வடநாடு வரை படர்ந்து பறந்ததாக வரலாறு சொல்கிறது.

மலையாகக் கிடந்த குன்றுகளையெல்லாம் கலையாக மாற்றி, அழியாத புகழைப் பெற்றவன் அவன்.

அவன்தான்-பல்லவ சாம்ராஜ்யத்தின் மிகப்பெருங் கீர்த்திக்குக் காரணமாயிருந்த-தந்திவர்மனுக்கு மகனாகப் பிறந்த மூன்றாம் நந்திவர்மப் போத்தரையன்.

இவன்-மன்னனுக்கு மகனாகப் பிறந்தும் - மாபெரும் வீரனாக இருந்தும் - செயற்கரிய காரியங்கள் செய்தும்-பல்லவப் பேரரசின் செங்கோலும் சிம்மாசனமும் இவனுக்குக் கிடைத்தது முறையல்ல சரியல்ல என்று, பனிப்படலம் போல் தெளிவற்றுத் தெரியும் சதிப்படலம் ஒன்று சொல்கிறது.

காட்சி 1.

நந்தியின் கொலுமண்டபம்.

[அமைச்சர்கள்-தளபதிகள்-கவிஞர்கள்-பிரதானிகள் எழுந்து நிற்க, நந்திவர்மன்-அரசவைக்குள் நுழைகிறான்.]

கட்டியன் :-குவலயமார்த்தாண்ட-சந்திரகுலப் பிரகாச - உக்கிரமகோப - நானிலக் காவல-அங்கநாட-அவனிநாராயண-மல்லையங்கான - பல்லவர்கோன் நந்திவர்மப் போத்தரையன்...

ஏனையோர் :- வாழ்க!

கட்டியன் :- வெள்ளாறும் தெள்ளாறும் வென்ற வீரவேங்கை புகழ்நந்தி....

அனைவரும் :- வாழ்க!

கட்டியன் :- பழையாறும் கடம்பூரும் கொண்ட பல்லவர் குலத்தோன்றல்....

ஏனையோர் :- வாழ்க!

[மன்னன் அமர்கிறான்-மற்றவரும் அமர்கின்றனர். அமைச்சர் மட்டும் கவலை கப்பிய முகத்தோடு காணப்படுகிறார்.]

நந்தி : அமைச்சரே எப்போதும் சிரித்த முகமும் செழித்த நகையுமாக இருக்கும் தங்களுக்கு என்ன வந்துவிட்டது இன்று-சிறுத்த முகமும் சிவந்த விழியுமாக அமர்ந்திருக்கிறீர்கள்?

அமைச்சர் : மன்னா!

நந்தி : சொல்லுங்கள் அமைச்சரே!

அமைச்சர் : அலை அலையாகப் பொங்கிவரும் மாற்றானின் படைகளையெல்லாம் மலை மலையாக வெட்டி வீழ்த்திக் குவிக்கும் ஆற்றல் படைத்த தங்களை - ஆயிரமாயிரம் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கும் உங்களை - எங்களிடமிருந்து பிரிக்க-ஒழிக்க-நம்மால் வெல்ல முடியாத தந்திரம் வாய்ந்த சதி நடக்கிறது.

அரசவைப்புலவர் பெருந்தேவனார் : (எழுந்து) என்ன? வண்மையால், கல்வியால், மாபலத்தால்; ஆள்வினையால். உண்மையால் பாராள் உரிமையால் - திண்மையால் தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு யார் வேந்தர் ஏற்பார் எதிர்.

அமைச்சர் : அரசரை எதிர்க்கவும் ஒழிக்கவும் எண்ணுவது-காவலனல்ல கவிஞரே...

பெருந்தேவனார் : பிறகு?

அமைச்சர் : ஒரு பாவலன்...

நந்தி : பாவலனா?

அமைச்சர் : ஆமாம் மன்னவா-யாரோ ஊர்பேர் தெரியாத ஒரு கவிஞன் - புலவர்கள் இசைபாடி வாழ்த்தும் தங்களை, வசைபாடி வீழ்த்த அறம்பாடித் திரிகிறானாம்.

நந்தி : அஹ்-ஹ-ஹ-ஹ-ஹா...அமைச்சரவர்களே - என்மீதுள்ள அளவுகடந்த அன்பால்-யார் எதைச் சொன்னாலும் நீங்கள் நம்புகிறீர்கள்-அதை நினைத்து வெம்புகிறீர்கள்-கலங்குகிறீர்கள் இல்லையா? பகைவர்களின் வில்லாலும் வேலாலும் கொல்லமுடியாத உங்கள் மன்னனை, யாரோ ஒரு புலவன், அறம் வைத்துப் பாடுகின்ற சில சொல்லாலா கொன்றுவிட முடியும்? மதிமிக்க அமைச்சரே-இதைத் தாங்கள்கூடவா நம்புகிறீர்கள்?

அமைச்சர் : இல்லை மன்னா—அறம்பாடும் திறம்படைத்த புலவன், ஒருவன் மீது நச்செழுத்து வைத்துக் கெடுக—அழிக என வசைபாடினால்—அது நடைபெறுமென்று நாடே நம்புகிறது—நானும் நம்புகிறேன்.

நந்தி : அருமைப் புலவர் பெருந்தேவனார் அவர்களே—வாய்ச்சொல்லால் வசைபாடி ஒருவனைக் கொன்றுவிட முடியுமென்ற கொள்கையை தாங்கள் நம்புகிறீர்களா?

பெருந்தேவனார் : அரசே-புலவர்கள் அறம்பாடும் முறைக்குத் தமிழில் தனி இலக்கணமே இருக்கிறது. அது தவறாது பாடினால் பாடப்படும் வசை பலிக்குமென்றுதான் சொல்லப் படுகிறது.

நந்தி : அறம் பாடுவதற்கு இலக்கணமா? என்ன கவிஞரே அது?

பெருந்தேவனார் : மங்கலநீக்கி-மறலி எழுத்திட்டுப் பொங்கு வெகுளிசினங்கொள் புலவோர்கேள் - குற்றங்கடிய குறையறிந்து தீயோனை-நற்றமிழ் வெள்ளைப்பா நாலில் அறங்கூற-எட்டை இறுதியிட்டெண்ணி ரெண்டை முன் வைத்து வெட்டென்றால் அவன் சிரம் வீழாதோ? இப்படிப் பல இலக்கணமிருக்கிறது அரசே-ஆனால் வசைபாடும் புலவன் இந்த இலக்கணந் தவறி அறம்பாடி விட்டால், பாடப்படுகிறவனுக்குப் பதில்-பாடுகிற புலவனே இறந்து படக் கூடமென்றும் இலக்கணம் கூறுகிறது.

நந்தி : அருமைக் கவிஞரே-தமிழ் தொன்மையானது-மென்மையானது-இனிமையானது-இதமானது, மன நோயும் உடல் நோயும் தீர்க்க வல்ல மாமருந்து போன்றது-கற்பவர்க்கும் கேட்பவர்க்கும் அது வாழ்வளிக்கும்-வளமளிக்கும் இப்படித்தான் நான் நம்புகிறேன்-ஆனால். அது சாவளிக்குமென்று தாங்கள் சொல்கிறீர்கள். அமைச்சரே-இதை நேரடியாகக் கண்டு தெரிய நான் மிக மிக ஆர்வப்படுகிறேன். ஆட்களை விட்டுத் தேடச் சொல்லுங்கள்-அப்படி அறம்பாடித் திரியும் புலவன் யாரென்பதைச் சீக்கிரமே கண்டு பிடித்து என் முன் கொண்டு வந்து நிறுத்துங்கள்......இன்றைய அவை இத்துடன் கலையலாம்.

காட்சி 2.

(நாடகக் கணிகை செவ்வல்லியின் இல்லம்)

பொழிகின்ற நிலவு, எரிகின்ற நெருப்பாகவும், வீசுகின்ற தென்றல் வாட்டுகின்ற வாடையாகவும் படுகிறது செவ்வல்லிக்கு. அவளின் கவலை காதற் கவலை. செங்கீரைத் தண்டுபோல், துவண்டு சோர்ந்து படுத்திருக்கிறாள் அவள். அவளின் தோழியான மஞ்சு அங்கே வருகிறாள்,

மஞ்சு : என்னம்மா தூக்கமா?

செவ்வல்லி : தூக்கமில்லையடி - இது ஏக்கம். இன்றைக்கும் அவர் வரவில்லையேடி. எப்படி என்னால்.........

மஞ்சு : தாளமுடியும்? தாங்கமுடியும்? முடியாதம்மா முடியாது இந்த மாதிரி நீங்க பாகா உருகிப் பனியாக் கரைகிறது அந்த மன்னருக்குத் தெரிந்தால் தானே...அரசர்களுக்கெல்லாம் இதயம் இரும்பாத்தாம்மா இருக்கும்.

செவ்வல்லி : நீ நந்திவர்மரையுமாடி சொல்ற?

மஞ்சு : இல்ல—அவரு அப்பா தந்திவர்மரையுந்தான் சொல்ற(ன்)

செவ்வல்லி : —...? அவர் ஒருக்காலும் என்ன மறக்கமாட்டார் மஞ்சு.

மஞ்சு : தேன் குடித்த சிட்டாச்ச-மலர மறந்திடுவாரா என்ன? நீங்க ஒருத்தி மட்டும் அவருக்குக் காதலியாக இருந்தா - ஒருநாள்கூட அவர் உங்கள மறக்கமாட்டார். அவருக்கோ அந்தப்புரத்தில் ராணியார் இருக்கிறாங்க - கோட்டைக்கு இந்தப் புரத்தில் நீங்க இருக்கீங்க - பாவம் - மன்னர்தான் என்ன பண்ணுவார்.

செவ்வல்லி : கேலியாடி செய்ற?

மஞ்சு : உள்ள நிலையைச் சொல்ற(ன்). அவரோ ஊராளும் மன்னர் - பாராளும் வேந்தர்-புகழ் நந்திவர்மப் போத்தரையன். நீங்களோ ஆடிப் பிழைக்கும் நாடகக் கணிகை. காலம் உங்களைக் காதலர்களாக்கி, ஊருக்கும் வேறு யாருக்கும் தெரியாது உறவாடி மகிழச் செய்கிறது. நடக்கக்கூடாத இது நடந்து வருவதே பெரிய காரியம். இதைத் தினசரியும் நடக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களே-இது நல்ல காரியமா?

செவ்வல்லி : அடியே மஞ்சு.

மஞ்சு : ஏம்மா ..

செவ்வல்லி : உனக்கு இலக்கியச்சுவையே தெரியாதடி.

மஞ்சு : நீங்கதான் சொல்லுங்களேன்-நான்தான் கேட்கிறேன்...

செவ்வல்லி : இலக்கியத்தில் வருகிற தலைவிகளெல்லாம் - மன்னர்மீது தாண்டி காதல் கொண்டிருக்கிறார்கள்.

மஞ்சு : பைத்தியம்-எல்லாத் தலைவிகளுமோ மன்னரைக் காதலித்தா - மன்னர் கதி-என்ன ஆகும் ஏட்டில் படிச்சத வீட்டில் நடத்துறீங்க-நடத்துங்க.

[காலடிச் சத்தக் கேட்டு இருவரும் திரும்பிப்பார்க்கின்றனர். அங்கே பல்லவர்கோன் நந்திவர்மன் - மன்னனுக்குரிய தோரணை ஏதுமின்றி உள்ளே நுழைகிறான். மஞ்சு நழுவுகிறாள்.]

நந்தி : செவ்வல்லி.

செவ்வல்லி : ... .?

நந்தி : இல்லந்தேடி வந்திருக்கிறானே உன் ஏழைக்காதலன்-அவனைக் கொஞ்சம் உள்ளந் திறந்து பேசி-உதடு திறந்து கொடுத்து...

செவ்வல்லி : மன்னவரே!

நந்தி : ஏன் கண்ணே!

— தொடரும்.

"தேனருவி"

தியாகன்

வெண்பாப் போட்டி

திருக்குறள் தென்றல் வெண்பா !

துய்ப்பார்க்குத் துய்ப்பாய துய்ப்பாக்கித் துய்ப்பார்க்குத்
துய்ப்பாய தூஉம் துடியிடையாள்--தூய்தென்ருல் !
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

—பாளை-எழிலேந்தி, பெரியகாட்டுப்பாளையம்.

நன்றே உனதெண்ணம்; நச்சு மதியினரை
இன்றே விலகி இருந்திடுவாய்--தென்ருல் !
பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

—நாரையூர், விசு. மே. சிவபுரி:

தெள்ளமுதத் தீந்தமிழில் தேமதுரப் பாவடித்துத்
தென்னகத்திற் கீந்ததென்ற லே'கழகத்--துள்ளிருந்து
செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

—பாப்பா, காமாட்சிபுரம்.

தன்மனையா ளன்றிப் பிறர்மனைக்கா சைப்படுவான்
சென்மமுற்றுந் தீயவனுந் தென்றலே--பின்னை
நலக்குரியார் யாரென்னின் நாமநீர் வைப்பில்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார்.

—க. தவசியானந்தம், அருப்புக்கோட்டை.

உத்தமன் காந்தி உலகத்தார் உள்ளமெல்லாம்
செத்தும் குடிகொண்டான் ! தென்றலே--சுத்தமாய்
உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

—தா. வெங்கட்டராசன், கம்பம்.

கன்னத்தில் ஒன்றைக் கடிந்து அறைந்தாரேல்
இன்னென்றைக் காட்டென்ருன் ஏசுபிரான்--தென்ருல் !
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

புதுவை இரத்தினசனர்த்தனன், தாம்பரம்.

தென்னவரை நேருபிரான் திட்டியதால் உள்நடுங்கிக்
கண்ணெதிரே கண்டார் கருந்துணியைத்--தென்றலே
யாகா வாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

—காரைத்தமிழரசி, காரைக்கால்.

சீர்வாய்ந்த வேள்பாரி சேணின்ற முல்லைக்குத்
தேர்ஈந்தான் ஏனேசொல் தென்றலே !--பார்மீதில்
ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு,

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

தொன்றுதொட் டேட்டைத் தொழுது படித்திருந்தால்
பெண்புத்தி பின்புத்தி யாகுமோ--தென்றலே
தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.

—பொன் கணபதி, இராச. இராமலிங்கபுரம்.

பொன்ரு வளஞ்சிறந்த பொன்விளையும் நன்னுடாந்
தென்னுட்டிற் கீடுண்டோ தென்றலே;--என்றுமே,
நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.

—கோ. ப இராமசாமி, கோண்டிசெட்டிபட்டி.

மானம் பெரிதென்று மாண்டான் இரும்பொறை
தேனும் நறுஞ்சுவைத் தென்றலே--அந்நாள்
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

—நகி, விழுப்புரம்.

தென்றல்

கரும்புதந்த தீஞ்சாருய்;
கனிதந்த நறுஞ்சுளையாய்
விரும்புகின்ற தேனமுதாய்;
வழங்குகின்ற நறும்படையல்

பொங்கல் மலர் 1961

'மாங்கனி' இசைப்பாடலுக்குத்
தேன்கனி விஜயலட்சுமியின் நடனங்கள்.

அறிவாராய்ச்சிக் கட்டுரைகள் தர இசைந்துள்ள பெரும்பேரறிஞர்கள்.

டாக்டர் மு. வரதராசனுர்,
டாக்டர் சிதம்பரநாதனுர்,
டாக்டர் இராசமாணிக்கனுர்,
அ. மு. பரமசிவானந்தம்,
தேவநேயப்பாவாணர்,
கா. அப்பாத்துரையார்,
மெ. சுந்தரம்,
ஜெபரத்தினம்,
கி. ஆ. பெ. விசுவநாதம்,
ஜீவபந்து ஸ்ரீ பால்.

திராவிடத்தின் விடுதலையே இலட்சியமெனக் கொண்டு வீரப்பணி புரியும் தென்னுட்டுத் தீரர்கள்

அறிஞர் அண்ணு,
நாவலர் நெடுஞ்செழியன்,
சொல்லின் செல்வர் சம்பத்,
பேராசிரியர் அன்பழகன்,
சிந்தனைச் சிற்பி சிற்றரசு,
பேராசிரியர் மா. கி. தசரதன்,
தில்லை. வில்லாளன்,
கே. ஏ. மதியழகன்,
க. அறிவழகன்,
அருப்புக்கோட்டை இராமசாமி,
மா. சு. சம்பந்தன்.

தென்றல் தரும் இன்பமெனத் தென்பாங்கில் இசைபாடும் செந்தமிழ்க் கவிஞர்கள்.

வாணிதாசன்,
முடியரசன்,
கம்பதாசன்,
தமிழண்ணல்,
இசையரசு
எம். எம். தண்டபாணி தேசிகர்,
தமிழ்ப்பித்தன்,
தமிழ்முடி.

சிந்தை கவரும் விந்தைத் தமிழ் வடிக்கும் சிறுகதை மன்னர்கள்.

அரு. இராமநாதன்,
இராதா மணாளன்,
இரா. இளஞ்சேரன்,
பி. சி. கணேசன்,
மா. தங்கவேலர்,
நா. ஜகந்நாதன்,
ந. தாமோதரன்,
நா. பாண்டுரங்கன்.

ஆசிரியர்

கண்ணதாசன் எழுதும்

கவிதை, சிறுகதை, தத்துவக் கட்டுரை

விலை ரூபாய் 2.

தென்றல் சென்னை-6.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.